| ➢ சஹறன பியச சேவை நிலையத்துககுச் சென்று பின் விமான நிலையத்துக்கு செல்லல்.பொருத்தமான உடைகளை அணிதல்.<br>➢ வீட்டிலுள்ள அனைவரினதும் ஆசி பெற்று தெய்வ தரிசனத்துடன் செல்லத் தயாராகுதல்<br>➢ வழமையாக அணிந்திருக்கும் தங்க நகைகளை வீட்டில் கழற்றி வைத்து விட்டுச் செல்லல்<br>➢ செல்கின்ற நாட்டின் நேர மாற்றத்தை அறிந்திருத்தல்<br>➢ எல்லா ஆவணங்கள் அடங்கிய பிரதி செய்த கோவையை எடுத்துச் செல்லல்<br>➢ உங்களுடைய பாதுகாப்பு நலன் கருதி உள்ளாடைகளில் கடவுச்சீட்டு இலக்கம், தொடர்பு இலக்கங்களை பதிந்து வைத்திருத்தல்<br>➢ எப்பொழுதும் நேர்மைத் தன்மையும், உண்மைத் தன்மையும் கடைப்பிடித்தல்<br>➢ மற்றவர்களுக்கு இசைவாக நடந்துக் கொள்ளல்<br>➢ வேன், சாரதி தொடர்பாக நன்கு அறிந்திருத்தல்<br>➢ விமான நிலைய சட்ட திட்டங்களுக்கு இசைவாகநடந்து கொள்ளல் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமான நிலையத்தில்

## செய்யக் வேண்டிய கடமைகள்

- போகும் வாகனத்திலிருந்து விமான நிலையத்தின் நுழைவாயிலில் இறங்குதல்
- கொண்டு சென்ற பொருட்களை, பொதிகளை சரி பார்த்தல்.
- உங்களுக்குரிய பொதிகளை தள்ளு வண்டியில் அடுக்கி வைத்தல்
- உள்ளே செல்வதற்கு முன் பாஸ்போட், விமான பயணச் சீட்டு ஆகிய இரண்டையும் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் காட்டி விட்டு உள்ளே செல்ல வேண்டும்
- பொதிகளை பரிசோதனை செய்யும் பிரிவுக்கு சென்று பரிசோதனை உத்தியோகத்தரின் ஆலோசனையில் நடந்து கொள்ளல்.
- கொண்டு செல்லும் பொருட்களில் நிறையை முன்கூட்டியே அறிந்திருத்தல்
- அதன் பின் பணம் எடுத்து செல்வீர்களாயின் விருப்பமான வங்கியில் டொலர்களாகவோ அல்லது நீங்கள் செல்லும் நாட்டுக்குரிய பணத்தையோ மாற்றி எடுத்து செல்ல வேண்டும்
- தாங்கள் பயணிக்கும் விமானத்தின் இலக்கங்கள் பெயரையும் புறப்படும் நேரம் தொடர்பாகவும் தெளிவாக அறிந்திருத்தல்.
- விமான நிலையத்திலுள்ள விளம்பர தொலைக்காட்சியில் அவதானித்து தங்களுக்குரிய விமானம் தயாராக உள்ளதா என்பதை அறிந்துக் கொள்ளல்
- சமயோசித அறிவை பயன்படுத்தல்
- தான் செல்லும் நேரம் வந்த பின் பொதிகளை சரிபார்க்கும், பரிசோதிக்கும் பிரிவுக்குச் சென்று பொதிகளை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். விமான நிலையத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரிவுக்குச் சென்று ஆவணங்களை சரிபார்த்துக் கொள்ளவும்
- தாங்கள் செல்லும் விமானத்தின் பணிப் பிரிவுக்கு சென்று கடவுசீட்டு விமான பயணச் சீட்டை பரிசோதித்த பின் போடிங் பாஸ் பெறுதல் அதன்பின் கை பைகளை தவிர ஏனைய பொதிகளை பாரம் கொடுத்தல் வேண்டும்(பொதியை பாரம் கொடுப்பதற்கு முன் பெயர் விலாசம் சரியாக உள்ளதா என பார்க்கவும்)
- குடிவரவு குடி அகல்வு பிரிவுக்கு ஒப்படைப்பதற்குரிய எம்பாக்மன்ட் காட் சரியாக பூர்த்தி செய்து ஒப்படைக்கும் பிரிவுக்குச் சென்று வரிசை முறையை பின் பற்றி (பாஸ்போட், எம்பாக்மன்ட் ) என்பவற்றை

## செய்யக் கூடாதவை

- அதிக சத்தத்துடன் கூடிய தொலைபேசி பாவனையை குறைத்துக் கொள்ளல்.
- பதட்டத்தோடு செயல்படுவதை தவிர்த்து கொள்ளல்.
- தனது பொருட்கள், ஆவணங்களை கண்ட இடத்தில் வைப்பதையும், மற்றவர்களிடம் கொடுப்பதையும் தவிர்த்துக் கொள்ளல்
- விமான நிலையத்தில் தெரியாதவர்களுடன் உரையாடுவதை தவிர்த்துக் கொள்ளல்.
- சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்
- எப்பொழுதும் அமைதியாகவும் செயலில் கருத்தாகவும் இருப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்
- இடம், நேரம், காலத்தை அறிந்து செயல்படுவதை தவிர்க்க வேண்டாம்
- வேறு எவரின் பொருட்களையும் கொண்டு செல்லக் கூடாது
- கொண்டு செல்லும் பொதியின் நிறையை தெரிந்து வைத்திருங்கள்.
- சட்ட திட்டங்கள், விதிமுறைகளுக்கமைய நடந்து கொள்வதை தவிர்த்து கொள்ள வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பரிசோதனைக்குட்படுத்தல் வேண்டும்)<br>➢ சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருத்தல்<br>➢ அதன் பின் தான் செல்லும் விமான நுழைவாயிலின் இலக்கம், ஆசன இலக்கம் என்பவற்றை போடிங் பாஸ் மூலம் பார்த்து அறிந்து கொள்ளல்.<br>➢ அறிந்து கொண்ட பின் அது தொடர்பான நுழைவாயிலில் வரிசை முறையை பயன்படுத்தி உட்செல்லுதல் உட்செல்லும் போது போடிங் பாஸ் பரிசோதனை உத்தியோகத்தரின் சேவைக்கு அமைதியாக உட்படுத்தல்<br>➢ விமானத்துக்கு செல்லும் நுழைவாயிலில் திறக்கும் வரைகாத்திருத்தல்<br>➢ விமானத்திற்குச் ஆட்களை கொண்டு செல்லும் பேருந்துகளில் ஏறி விமானத்தில் ஏறும் நுழைவாயிலில் இறங்க வேண்டும்<br>➢ தாங்கள் பிரயாணம் செய்யும் விமானத்திற்கு நேரடியாக செல்வதற்கான பிரிவுகளும் உண்டு (அவற்றை மனதில் கொள்ளவும்) சட்ட திட்டங்கள், விதிமுறைகளுக்கமைய நடந்துகொள்ளல். | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானத்தினுள்ளே

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| ➢ விமானத்தில் ஏறிய பின் தனக்குரிய ஆசன இலக்கத்தை தெரிந்து அவ்வாசனத்தில் அமர்தல்.<br>➢ தான் கொண்டு செல்லும் கைப் பைகளை தலைக்கு மேலுள்ள கெபின் பெட்டியில் வைத்தல்<br>➢ விமான பணியாளர்கள் கூறுகின்ற அறிவுறுத்தல்களுக்கு கவனமாக செவிசாய்த்தல், பின்பற்றுதல்<br>➢ ஆசனத்தில் அமர்ந்தவுடன் தனக்குரிய ஆசன பட்டிகளை அணிந்து கொள்ளல்<br>➢ விமானம் புறப்படும் போது பயமின்றி இருத்தல் வேண்டும்.<br>➢ விமானம் ஆகாயத்தில் சமச்சீரான முறையில் செல்லும் போது மற்றுமே மலசல கூடத்திற்கு செல்லலாம்<br>➢ மலசல கூடத்தை சுத்தமாக பாவித்தல் வேண்டும்<br>➢ விமானத்தில் வழங்கப்படுகின்ற உணவுகளை மற்றவருக்கு இடையூறின்றி உணவருந்தல் வேண்டும்<br>➢ தாங்கள் இறங்கும் விமான நிலையத்தை அண்மிக்கும் போது அறிவித்தல் செய்வதை அவதானித்துக் கொள்ளவும் | ➢ அவசரப் படுவதும், குழப்பமடைவதையும் தவிர்த்து கொள்ளவும்<br>➢ மற்றவர்களுக்கு இடையூறு இல்லாது நடந்து கொள்ளவும்<br>➢ தான் கொண்டு செல்லும் கைப்பைகளை கெபினை தவிர வேறு எந்த இடத்திலும் வைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளவும்.<br>➢ கூறப்படும் அறிவுறுத்தல்களை அலட்சியப்படுத்த வேண்டாம்<br>➢ ஆசன பட்டிகளை முறையாக அணிந்து கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ குழப்பம்மடைவதை தவிர்த்துக் கொள்ளவும்<br>➢ எல்லா நேரங்களிலும் ஆசனத்திலிருந்து எழும்பி நடமாடுவதை தவிர்த்து கொள்ளவும்.<br>➢ மலசல கூடம் நவீன முறைபடுத்தப்பட்டுள்ளதால் அவற்றை சரியாக தெரிந்து கொண்டு சுத்தமாக பாவிப்பதை தவிர்த்து கொள்ள வேண்டாம்.<br>➢ உணவுகளை முறையாக அருந்தும் பழக்க வழக்கங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டாம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org \| aavanaham.org

| | |
|---|---|
| ➤ தனக்குரிய பாதுகாப்பு ஆசன பட்டியை அணிந்து கொள்ளல் வேண்டும்.<br>➤ விமானம் தரையிறங்கும் பொழுது சற்று பயமாக இருக்கலாம் பயமின்றி செயல்படவும்<br>➤ விமானம் புறப்படும் பொழுதும், தரையிறங்கும் பொழுதும் சிலருக்கு காது அடைத்துவிடும் போலிருக்கும் அவற்றை தவிர்த்துக் கொள்ள காதில் பஞ்சோ அல்லது துணியோ வைத்து கொள்ள வேண்டும்.<br>➤ இறங்கும் நாட்டிக்குரிய அனுமதி விண்ணப்பத்தை விமானத்திலேயே பூர்த்தி செய்து கொள்வது நல்லது( விண்ணப்பத்தினை விமானத்திலேயே பெற்று கொள்ளலாம்) எம்பசி காட் | ➤ தங்களுக்கு ஒவ்வாத உணவுகளை தவிர்க்கவும்<br>➤ இறங்கும் பொழுது மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் வரிசை முறையை பயன்படுத்தவும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லும் நாட்டின் விமான நிலையத்தில்

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| ➢ விமானத்தை விட்டு இறங்கிய பின் கடவுச்சீட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் என்பவற்றை குடிவரவு, குடி அகல்வு திணைக்களத்தின் உத்தியோகத்தரிடம் வழங்கி வெளியேறுவதற்குரிய அனுமதியை பெற்று கொள்ளல்.<br>➢ தாங்கள் பிரயாணம் செய்த விமானத்திலிருந்து பொதிகள் வரும் (பெல்ட்) பிரிவுக்கு சென்று தனது பொதிகளை சரிபார்த்து பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்<br>➢ பொதி பரிசோதனை பிரிவுக்குச் சென்று பொதிகளை பரிசோதனை செய்த பின் விமான நிலையத்தில்லிருந்து வெளியே செல்லலாம்.<br>➢ இறுதியாக தனக்குரிய பொதிகள், கைபைகள் ஆவணங்கள் அனைத்தையும் சரிபார்த்துக் கொள்ளவும்<br>➢ விமான நிலையத்திலேயே அனைத்து மலசல கூடம் பிரத்தியேக அறைகளில் ஆடைகளை மாற்றுவது சுத்தமாகவும், நேர்த்தியாகவும் வெளியில் செல்வதை உறுதிபடுத்தல்<br>➢ உங்களை அழைத்துச் செல்பவர் வரும் வரை காத்திருப்பது நல்லது<br>➢ உங்களுடைய முகவரின் தொலைபேசி இலக்கம் தெரிந்திருப்பது கட்டாயமாகும்<br>➢ உங்களை அழைத்து செல்வதற்கு எவரேனும் வராவிட்டால் தங்களிடமுள்ள முகவரின் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது விமான நிலைய விசாரணை பிரிவுக்கு சென்று தகவலை வழங்கலாம்<br>➢ தாங்கள் கொண்டு செல்லும் US$ டொலர்களை விமான நிலையத்திலுள்ள வங்கிகளில் செல்லும் நாட்டுக்குரிய பணமாக மாற்றிக் கொள்ளவும் | ➢ அவதானத்துடன் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ பொதிகளை எடுக்கும் பொழுது தங்களுடைய பொதிகளை சரி பார்த்து எடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ மற்றவர்களின் பொதிகளை எடுப்பதை தவிர்த்துக் கொள்ளவும்<br>➢ தனக்குரிய பொதிகள் ஆவணங்கள் அனைத்தையும் சரிபார்த்துக் கொள்வதை தவிர்த்து கொள்ள வேண்டாம்<br>➢ வெளியில் செல்லும் பொழுது நேர்த்தியாகவும், சுத்தமாகவும், அழகாகவும் செல்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ உங்களுடன் இணைந்து பிரயாணம் செய்தவர்களோடு செல்வதை தவிர்க்கவும்<br>➢ உங்களை அழைத்து செல்பவர் வரும் வரை அவசரப்படுவதையோ, குழப்பமடைவதையோ தவிர்த்துக் கொள்ளவும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலை செய்யும் வீட்டில், இடத்தில்

## செய்யக்கூடியவை

- தாங்கள் பணிபுரியும் வீட்டுக்குச் சென்றவுடன் தாங்கள் ஏற்கனவே கற்றுக் கொண்ட மொழியில் உரிமையாளர்களுக்கு வணக்கம் சொல்லுதல்
- வீட்டாரின் நன்மதிப்பையும், விருப்பத்தையும் பெற்றுக் கொள்ளல்.
- தனக்குரிய அறையை தெரிந்து கொண்டு தனது பொதிகளை முறையாக வைத்தல்
- எப்பொழுதும் வீட்டிலுள்ளோர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளல்
- எந்த நேரத்தில் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என தெளிவாக தெரிந்திருத்தல்
- எப்பொழுதும் சுத்தமாகவும், நேர்த்தியாகவும் இருத்தல்
- குளித்து விட்டு முடியை உலரவைத்துக் கட்டவும்
- பாவிக்கும் பொருட்களை சுத்தமாகவும், பாதுகாப்பாகவும் பேணுதல்
- தங்களின் சமயவழியாடுகளை தங்களின் அறைகளில் மட்டுமே வைத்துக் கொள்ளவும்.
- சமையல் தொடர்பான வேலைகளை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் செய்தல்
- அவர்களின் கலாச்சாரத்துக்கு ஏற்ப உடைகளை அணிவது நல்லது
- குடும்பத்தாருடன் அன்போடும், நம்பிக்கையோடும் பழகுதல், நடந்து கொள்ளுதல்
- எப்பொழுதும் பொருத்தமான சமயோசித அறிவை பயன்படுத்தல்
- பொருத்தமான நேரங்களில் வீட்டாரின் அனுமதியுடன் உறவினர்களோடு தொலைபேசியில் கலந்துரையாடுதல்
- தனக்குரிய சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்வதை உறுதிபடுத்துதல்
- எப்பொழுதும் சரியான முறைகளை கடைபிடிக்கவும்
- அவர்களின் சமய கலாச்சார முறைகளுக்கு மதிப்பளிக்கவும்.

## செய்யக்கூடாதவை

- வீட்டு ஒழுங்கு முறைகளை உரிமையாளர்களின் விருப்பத்திற்கு மாறாக செயல்பட கூடாது
- உறவினர்கள் வரும் பொழுது சரியாகவும், முறையாகவும் நடந்து கொள்ளல்
- எப்பொழுதும் துக்கமாக இருப்பதை தவிர்த்துக் கொள்ளவும்
- பொய், களவு, போன்ற விடயங்களை தவிர்த்துக் கொள்ளவும்
- அயல் வீட்டார்களிடம் உறவுகளை தவிர்க்கவும்
- வீட்டாரின் அனுமதியின்றி எவற்றையும் செய்யக் கூடாது
- கவலையீனமாக செயற்படுவதை தவிர்த்துக் கொள்ளவும்
- தேவையற்ற முறையில் மற்றவர்களிடம் நம்பிக்கை வைக்க கூடாது
- தவறான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டாம்
- அவர்களின் கலாச்சாரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயல்பட வேண்டாம்
- அவர்களின் சமய வழிபாட்டு முறைகளுக்கு இடையூறாக இருப்பதை தவிர்த்து கொள்ளவும்
- வேலை நேரங்களில் தொலைபேசி பாவனையை தவிர்த்துக் கொள்ளவும்.
- குளித்து விட்டு தலை முடியை சீரான முறையில் வைத்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| | ➢ சலவை செய்த ஆடைகளை எல்லோரும் பார்க்கும் இடத்தில் உலரவைப்பதை தவிர்த்துக் கொள்ளவும்.<br>➢ பொது இடங்களில் எமது சமய சடங்குகளை செய்வதை தவிர்த்துக் கொள்ளவும்.<br>➢ தொலைபேசி காட் பாவிப்பதை மட்டுப்படுத்தல்<br>➢ எல்லா விடயங்களையும் வீட்டுக்குச் சொல்ல வேண்டாம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இலங்கைக்கு வருகை தரல்

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
| --- | --- |
| ➢ 03 மாதத்திற்கு முன் வீட்டு உரிமையாளர்களுக்கு அறிவித்தல் கொடுத்தல்<br>➢ குடும்பத்தாரின் இணக்கப்பாட்டுடன் மீண்டும் இலங்கைக்கு வருவதை உறுதிபடுத்தல்<br>➢ வருவதற்கு முன் கொடுப்பனவுகள் அனைத்தையும் பெற்று விட்டோமா என மீள் பரிசோதனை செய்தல்.<br>➢ தங்களின் வேலைக் காலம் நிறைவடைவதை சரியாக தெரிந்திருத்தல்.<br>➢ வீட்டாரின் விருப்பச் சான்றிதழ் (NOC) பெறுதல்<br>➢ மீண்டும் நாடு திரும்புவதற்குரிய டிக்கட் பெறுவது தொடர்பான விபரங்களை தெரிந்திருத்தல்.<br>➢ தனக்குரிய கடவுசீட்டு ஏனைய ஆவணங்களை சரி பார்த்து உறுதிபடுத்திக் கொள்ளல்.<br>➢ வீட்டு உரிமையாளர்களின் ஏற்பாடுகளுக்கமைய விமான நிலையத்ததுக்கு வருதல்<br>➢ பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் பாஸ்போட் அனுமதிச் சீட்டு என்பவற்றை வழங்கி பரிசோதனை செய்து கொள்ளல்<br>➢ பொதி பரிசோதனை பிரிவுக்கு சென்று பொதிகளை பரிசோதனைக்குட்படுத்துதல்<br>➢ விமான நிலையத்துக்கு வந்த பின் தன்னுடைய கடவுச்சீட்டு, விமானச்சீட்டு என்பவற்றை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தல்.<br>➢ தனக்குரிய விமானப் பிரிவுக்குச் சென்று பொதிகளை ஒப்படைப்பதுடன் கடவுச்சீட்டு, விமான அனுமதிச் சீட்டினை பரிசோதனை செய்து மோனிங்பாஸ் பெற்றுகொள்ளல். | ➢ சேகரித்த பழைய பொருட்களைக் கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ளல்<br>➢ இலங்கையில் பாவனைக்குதவாத பொருட்களை கொண்டுவருவதை தவிர்த்து கொள்ளவும்.<br>➢ குடும்பத்தாருடன் முரண்பட்டுக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளவும்.<br>➢ 03 மாதத்திற்கு முன் தங்களுடைய பணி காலம் முடிவடைவதை உரிமையாளருக்கு அறிவிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ கொடுப்பனவு முழுமையாக கிடைக்கப்பெற்றது என்பதை கணக்கு பார்த்து தெரிந்து கொள்வதை தவிர்க்க வேண்டாம்<br>➢ கடவுசீட்டு, ஏனைய ஆவணங்களை முழுமையாக சரிபார்த்து தன்வசப்படுத்தி கொள்வதை தவிர்க்க வேண்டாம்<br>➢ ஒப்பந்த காலம் நிறைவுற்ற பின் இலங்கைக்கு வருவது அவசியம் என்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ தாங்கள் பொருட்களை கொண்டுவருவதற்கு அதிக நிறையுடைய பெட்டிகளை பயன்படுத்த வேண்டாம்<br>➢ இலங்கையில் பாவனைக்குதவாத அல்லது குடும்பத்தார் பாவிக்க முடியாத பொருட்களை கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ளுதல்<br>➢ இலங்கையில் பெறக்கூடிய பொருட்களை அங்கிருத்து கொண்டு வருவதை தவிர்த்து |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குடிவரவு , குடியகல்வு பிரிவுக்கு செல்லும் முன் எம்பசி காட் பூர்த்தி செய்து அதனுடன் பாஸ்போட், விமான அனுமதி பத்திரம் என்பவற்றை பரிசோதனைகுட்படுத்தி அனுமதியினை பெறுதல்
- தங்களுக்குரிய விமான பிரிவை சரியாக தெரிந்து கொண்டு அப்பிரிவுக்குச் செல்லுதல்
- அங்குள்ள அதிகாரிகளின் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்
- விமானத்தில் ஏறிய பின் இலங்கையிலிருந்து செல்லும் போது கடைபிடித்த சகல விடயங்களையும் பின்பற்றுதல்
- இலங்கை விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கிய பின் குழப்பமடையாமல், மற்றவர்களுக்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்ளவும்
- பூர்த்தி செய்யப்பட்ட எம்பசி காட், கடவுச்சீட்டு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு சமர்ப்பித்து வெளியேறுவதற்குரிய அனுமதியை பெற்றுக்கொள்ளல்.
- விமானத்தில்லிருந்து பொதிகள் வரும் பிரிவுக்குச் சென்று தங்களுடைய பொதிகளை பெற்றுக்கொள்ளல்
- ஏதேனும் பொருட்கள் வாங்க வேண்டுமாயின் தீர்வையற்ற வியாபார பிரிவுக்கு சென்று பொருட்களை பெறலாம்
- பொதிகள் பரிசோதனை செய்யும் பிரிவுக்கு சென்று பரிசோதித்து வெளியே செல்லலாம்
- தாங்கள் வரும் பொழுது டொலர்கள் ஏதும் கொண்டு வந்திருப்பின் விமான நிலையத்திலுள்ள வங்கிகளில் மாற்றி கொள்ளலாம்
- விமான நிலையத்துக்குச் அருகாமையிலுள்ள சஹண பியச நிலையத்துக்கு சென்று எமது நாட்டுக்குரிய உடைகளை அணிந்து வருவது அவசியம்

கொள்ளவும்.

- கொண்டு வரும் பொருட்களையோ அல்லது பொதிகளை வேறு எவரிடமோ வைத்திருக்க கொடுக்க வேண்டாம்
- அறிமுகம் இல்லாதவர்களோடு தொடர்புகளை தவிர்த்துக் கொள்ளவும்.
- ஏமாற்றுபவர்கள் உள்ளனர் என்பதை மனதில் கொண்டு எப்பொழுதும் விழிப்பாக இருப்பதை தவிர்க்க வேண்டாம்
- அறிமுகமில்லாத வாகனங்களில் வருவதை தவிர்த்தல்
- வருவதற்கு முன் குடும்பத்தாருக்கு அறிவித்து குடும்பத்தாரின் பாதுகாப்புடன் செல்வது நன்று.
- தாங்கள் பணிசெய்த நாட்டின் கலாச்சார உடைகளை அணிந்து வருவதை தவிர்த்து கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்துடன் இணைதல்.

## செய்யக்கூடியவை

- வீட்டிலோ அல்லது ஆலயங்களிலோ வழிபாட்டில் ஈடுபடுதல்.
- குடும்பத்தார், பிள்ளைகளுடன் அன்பாகவும், பாசத்தோடும் பழகுதல்
- கொண்டு வந்த பரிசுப் பொருட்களை ஆசையுடன் உரியவருக்கு வழங்கி சந்தோஷத்தை பகிர்ந்துகொள்ளல்
- அயலவர்களிடமும், உறவினர்களுடனும் அன்பாக பழகுதல்
- பொருத்தமான நேரத்தில் பிள்ளைகளின் கல்வி தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடுதல்
- வகுப்பாசிரியர் அதிபரைசந்தித்து பிள்ளைகளின் கல்வித் தரம் தொடர்பாக அறிந்து கொள்ளல்
- ஆலயங்களுக்குக் சென்று குருக்களை சந்தித்து சமய வழிபாட்டில் பிள்ளை குடும்பத்தாரின் ஈடுபாடு தொடர்பாக கலந்துரையாடுதல்
- பொருத்தமான நேரத்தில் கணவருடன் அல்லது பெற்றோருடன் கலந்துரையாடி அனுப்பபட்ட பணத்தை கொண்டு எவ்வாறான அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றிருப்பதை கலந்துரையாடலாம்
- செலவு செய்த விபரங்களை தெளிவாக தெரிந்திருத்தல் நன்று
- கணவனின் பழக்க வழக்கங்கள் தொடர்பாக பவ்வியமாக அறிந்துக்கொள்ளல்.
- நான் இல்லாத சந்தர்ப்பத்தில் குடும்பத்தார் ,பிள்ளைகள், உறவினர்களுடனும், அயலவர்களுடனும் எவ்வாறு நடத்துள்ளனர் என்பதை அறிந்திருத்தல்

## செய்யக்கூடாதவை

- இறை வழிபாடு செய்வதை தவிர்க்க வேண்டாம்
- குடும்பத்தாருடனும், பிள்ளைகளுடனும் முரண்பட்டுக்கொள்ளுவதை தவிர்த்தல்
- சூழலுக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளுதல்
- சமூகத்திலிருந்து தன்னை வேறுபடுத்தி காட்டிக்கொள்ளல் ஆகாது
- எந்த நேரத்தில் எந்த விடயத்தைப் பேச வேண்டும் என்று புரிந்து செயல்படுவதை ஞாபகத்தில் கொள்ளவும்
- வீட்டுச் சூழலுக்கு ஏற்ப தான் நடந்துகொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்
- சென்றதற்கான நோக்கம் நிறைவேறா விட்டால் குடும்பத்தாரின் ஒருங்கிணைப்பை சீர் குலைக்க வேண்டாம்.
- ஆடம்பர செலவுகளை தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்
- பணத்தை வீண்விரயம் செய்ய வேண்டாம்
- கலாச்சார விழுமியங்களை

| | |
|---|---|
| ➢ வெளிநாடு செல்வதற்கு முன் குடும்பத்துடன் கலந்துரையாடிய நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதா என்பதை அறிந்திருத்தல்<br>➢ நோக்கம் நிறைவேயிருப்பின் குடும்பத்தாரையும், பிள்ளைகளையும் உதவியவர்களையும் வெளிப்படையாக பாராட்டுதல்<br>➢ நோக்கம் நிறைவேறாவிட்டால் முரண்பட்டுக் கொள்ளாமல் குடும்பத்தாருடன் இணைந்து பரஸ்பரம் கலந்துரையாடி அதற்கான காரணங்களை ஆராய்ந்து அறிந்திருத்தல்<br>➢ எப்பொழுதும் குடும்ப ஒருங்கிணைப்பை பாதுகாப்பதில் அக்கறை செலுத்துதல் | சீர்குலைக்க வேண்டாம்<br>➢ சிறுவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் ஆடம்பர செலவு செய்வதை தவிர்த்து கொள்ளவும்<br>➢ எதிர் காலத்தைப் பற்றி மறந்துவிட்டு செயற்பட வேண்டாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வெளிநாடு புறப்படுதல்

| செய்யக் கூடியவை | செய்யக் கூடாதவை |
|---|---|
| ➢ ஏற்கனவே பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்வதாயின் ஏற்கனவே பின்பற்றியுள்ள சரியான வழிமுறையை பின்பற்றவும் | ➢ முகவரின் சரியான விபரங்களையும் தொடர்புகளையும் தெரிந்து கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம் |
| ➢ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்பு கொண்டு தொழில் தொடர்பான நிச்சயத்தன்மையை அறிந்து கொள்ளல் | ➢ இடைத்தரகர்களை நம்ப வேண்டாம் |
| ➢ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் மீண்டும் தன்னை பதிவு செய்து கொள்ளல் (புதுப்பித்துத் கொள்ளுதல்) | ➢ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் தன்னுடைய பதிவை புதுப்பித்துக் கொள்வதை தவிர்க்க வேண்டாம் |
| ➢ பிள்ளைகளின் கல்வி, போஷணை தொடர்பான விடயங்களில் நிச்சய தன்மையை உருவாக்கி கொள்ளுதல் | ➢ குடும்பம் தொடர்பாக கற்ற அனுபவத்தினை பாடமாக பெற்றுக் கொள்ள தவற வேண்டாம் |
| ➢ குடும்ப அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக மீளாய்வு செய்த போது கற்ற அனுபவத்தை பின்பற்றுதல். | ➢ ஆவணங்கள் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் கவனத்தை செலுத்துவதை தவிர்க்க வேண்டாம் |
| ➢ உழைத்த பணத்தை சரியாக முகாமைத்துவப் படுத்துவது தொடர்பாக அதிக கவனம் செலுத்துதல். | ➢ குடும்ப அபிவிருத்தி தொடர்பான நோக்கத்தை கருத்திற் கொண்டு செயற்படுவதை தவிர்க்க வேண்டாம் |
| ➢ நோக்கம் நிறைவேறுவதில் கண்ணும் கருத்துமாக இருத்தல். | ➢ எப்பொழுதும் விழிப்பாக செயற்படுவதை தவிர்க்க வேண்டாம் |
| ➢ கடந்த கால அனுபவங்களை பாடமாக பெற்றுக் கொண்டு எதிர்காலத்தில் தன்னை சரியாக வழி நடாத்திக் கொள்ளுதல் | ➢ ஏற்கனவே சரியாக பின்பற்றிய வழிமுறைகளை மீண்டும் பின்பற்ற தவற வேண்டாம் |
| ➢ ஒரு படி மேலும் முன்னேறும் விதத்தில் அனைத்து செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் | |
| ➢ அனைத்து ஆவணங்களையும் பாதுகாப்புடன் வைப்பதை உறுதிப் படுத்தல் | |
| ➢ எப்பொழுதும் விழிப்பாக செயல்படுவது அவசியமாகும் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் இணைதல்

| செய்யக் கூடியவை | செய்யக் கூடாதவை |
|---|---|
| ➢ மீண்டும் சமூகத்தோடு இணைவதில் ஆர்வம் காட்டுதல்<br>➢ வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலுள்ள நன்மைகளை பயன்படுத்தவும்<br>➢ தன்னுடைய திறமையை அறிந்து அதற்கேற்ற கைத்தொழில் ஒன்றை ஆரம்பித்தல்<br>➢ கைத்தொழில் ஒன்றினை எவ்வாறு செய்வது எப்படி செய்வது, சந்தைப் படுத்தல் தொடர்பாக நன்கு அறிந்திருத்தல்<br>➢ தான் நிரந்தரமாக சமூகத்தோடு இணைந்திருப்பதா அல்லது தற்காலிகமாகவா என்பதை தெரிந்திருத்தல்<br>➢ நிரந்தரமாயின் அதற்கேற்ற திட்டம், தற்காலிகமாயின் அதற்கேற்ற திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்<br>➢ சமூகத்தின் கலாச்சாரத்துடன் இசைவாகச் செயல்படுதல்<br>➢ சமூகத்தாருடன் அன்பாகவும், சமாதானமாகவும் வாழ்தல்<br>➢ அதிக அளவிலான நல்ல ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுதல்<br>➢ இருக்கும் பணத்திற்கேற்ப கைத்தொழிலை ஆரம்பித்தல்<br>➢ குடும்ப அபிவிருத்தி தொடர்பான நோக்கத்தில் கண்ணும் கருத்துமாக செயல்படுதல்<br>➢ கடன் பெறும் வழிமுறைகளை சரியாக தெளிவாக தெரிந்திருத்தல் | ➢ முழுமையான விருப்பத்துடனும், தெளிவான அறிவுடனும் கைத்தொழிலை ஆரம்பிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்புகளை அதிகரித்து நன்மைகளைப் பெற தவற வேண்டாம்<br>➢ தான் செய்யும் கைத்தொழில் ஊடாக உற்பத்தி செய்யும் பொருட்களை இலகுவான முறையில் சந்தைப்படுத்த முடியுமா என்பதை ஆராய்வதை தவிர்க்க வேண்டாம்<br>➢ சமூக கலாச்சாரத்துக்கு முரணாக செயல்படுவதை தவிர்த்துக் கொள்ளுதல்<br>➢ மேலும் மேலும் நல்ல ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதை தவிர்க்க வேண்டாம்<br>➢ இருக்கின்ற பணத்தின் அளவுக்கு ஏற்ப கைத்தொழிலை ஆரம்பிப்பதை தவிர்க்க வேண்டாம்<br>➢ குடும்ப அபிவிருத்தி நோக்கத்தை நோக்கி செயல்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டாம்<br>➢ ஆடம்பர செலவுகளை தவிர்த்துக் கொள்ளவும் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சகக் கடத்தல் என்றால் என்ன?

- தனக்கு தெளிவான முறையில் விடயங்களை தெளிவுபடுத்தாமல் அழைத்து செல்லுதல்
- வயது மாற்றம், முக மாற்றம், ஆவணங்கள் மாற்றம், பயமுறுத்தி அழைத்து செல்லல்
- குறைந்த ஊதியத்துக்கு அதிக வேலை செய்தல்
- வஞ்சனை முறையில் பலாத்காரம் செய்தல்
- பலாத்காரமாக அழைத்துச் செல்லுதல்
- பொய் வார்த்தைகளால் கற்பனையை அதிகரித்தல்
- அதிகமாக பணம் பெறுதல்
- வெளிநாடு சென்ற தாயின் பிள்ளைகள் தரகர்களிடம் அகப்படுதல்
- சட்ட ரீதியாக, அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் தொடர்பாக தெரியாமை
- விழிப்பாக இல்லாவிடின் சில சந்தர்ப்பங்களில் மனித கடத்தலுக்கு ஆளாகுதல்
- குறித்த வேலைக்கு அழைத்துச் சென்று வேறு வேலையை வழங்குதல்
- ஒப்பந்தத்திலுள்ள சம்பளத்திற்கு மாறாக குறைந்த சம்பளம் வாங்குதல்
- மறை முகமாக பாலியல் செயற்பாடுகளுக்கு தூண்டுதல்
- எல்லா வகையிலும் உண்மை, நேர்மை சரியான வழி என்பவற்றை மறைத்து தவறாக வழிநடத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவர்கள் அல்லாது வெளிநாட்டிலுள்ள நண்பர்கள், உறவினர்கள் அனுப்பும் வீசாவின் ஊடாக செல்லுதல்.

- இலங்கையிலிருந்து 30% அல்லது 36% மானவர்கள் சுயமாக செல்கின்றனர்
- இவ்வாறு செல்பவர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவற்றினை தடுத்து பாதுகாப்பான தொழில்களை மேற் கொள்வதற்கு வழிகள் உள்ளன.
- வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளது.
- அவ்வாறு செல்பவர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் 400 US$ டொலர் கட்டி பதிவு செய்யலாம்
- ஏற்கனவே 1000 டொலர் கட்ட வேண்டும் இப்பணத்தை மீண்டும் எடுக்கலாம்
- தற்போது நடைமுறை இல்லை.
- பயிற்சி நிலையங்களுக்கு சென்று பொருத்தமான பயிற்சிகளை பெற வாய்ப்புண்டு
- செல்லும் நாடுகளிலுள்ள வெளிநாட்டு தூதுவர் ஆலயத்தில் வேலை வழங்குனருடன் ஒப்பந்தம் செய்வதற்கு வாய்ப்புகள் உண்டு
- சுயமாக சென்றாலும் பாதுகாப்பான முறையில் தொழில் செய்வதற்குரிய சகல சட்டரீதியான வழிமுறைகளை பின்பற்றுவது அவசியமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம் ஏற்படின் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

- உரிமையாளர்
- கல்யாணச் சான்றிதழ்
- பிறப்புச் சான்றிதழ்
- வங்கிக் கணக்கு பிரதிகள்
- கிராம சேகவரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழ்
- சத்தியக் கடதாசி
- கடவுசச்சீட்டு பிரதி
- மேலதிக பொருத்தமான ஆவணங்களும், புகைப்படமும்.
- பதிவு சான்றிதழ் மேற் குறிப்பிட்ட ஆவணங்களை எடுத்துக்கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இவ்விடயம் தொடர்பாக செயல்படுகின்ற அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்
- இறந்த நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய மரண விசாரணைகள் நடை பெறும்
- மரணம் சம்பவித்த விதம் தொடர்பிலேயே விரைவாகவும் தாமதமாவதற்கும் காரணமாக அமைகிறது.

# சேவை ஒப்பந்தம்

- உங்கள் சேவை சம்பந்தமாக வேலைவழங்குனர் தொழில்வாய்ப்பு முகவர் ஆலயத்துடன் (ஏஜன்சியுடன்) ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுவார்.
- நீங்களும் ஏஜன்சியுடனும் வேலை வழங்குனருடனும் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட வேண்டும். இந்த ஒப்பந்தத்தை நீங்கள் கைச்சாத்திடும்போது உங்களுக்கு நம்பிக்கையான ஆங்கில மொழித் தேர்ச்சி பெற்ற ஒருவருடன் செல்ல வேண்டும். ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளை வாசித்து நன்கு புரிந்துகொண்டு அதில் கையொப்பம்யிட வேண்டும்
- அதிலே குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம், வேலை செய்யும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை விடுமுறை மற்றும் ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்குச் செல்லுபடியாகும் என்பன தெபடர்பாகவும் நீங்கள் எத்தகைய வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதா என பார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவச் சான்றிதழ்

- மருத்துவச் சான்றிதழ் நீங்கள் அங்கு எடுத்துச் செல்ல வேண்டும்
- நீங்கள் தினசரி பயன்படுத்தும் மருந்து வகைகள் இருப்பின் மருத்துவரொருவரின் அங்கீகாரத்துடன் அவற்றை எடுத்துச் செல்ல மறக்க வேண்டாம்
- நீங்கள் உங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொள்வதும் காப்புறுதி செய்து கொள்வதும் கட்டாயமாகும்
- உங்கள் பெயரில் வதியாதோர் வெளிநாட்டு வங்கிக் கணக்கொன்றை கட்டாயமாகத் திறக்கவும். உங்களுடைய பணத்தை பாதுகாப்பாக சேமிப்பதற்கு அது உங்களுக்கு பெரிதும் பயன்தரும்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் அமைந்துள்ள விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் அலுவலகத்திலிருந்து குறைந்த தொகைக்கு உங்கள் விமான பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்
- உங்களுக்கு பெற்றுத்தரப்படும் விமான பயணச் சீட்டிலுள்ள திகதி மற்றும் நேரம் என்பவற்றை சரிபார்த்துக் கொள்ளவும்.
- விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன்னர் நீங்கள் பின்வரும் ஆவணங்களை தயாராக வைத்திருப்பது பொருத்தமானது கடவுச்சீட்டு (பாஸ்போட்) , விமானப் பயணச் சீட்டு, தொழில் ஒப்பந்தம்
- நீங்கள் தொழில்புரிவதற்கு எதிர்பார்க்கும் நாட்டில் அமைந்துள்ள இலங்கைத் தூதர்கத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்கள். உங்கள் வேலைவழங்குனரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், இலங்கை தொழில்வாய்ப்பு ஏஜன்சி பெயர், முகவர் தொலைபேசி இலக்கம் மற்றும் நீங்கள் செல்கின்ற நாட்டில் உங்களை பொறுப்பேற்கும் தொழில்வாய்ப்பு முகவர் ஆலயத்தின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை கட்டாயமாக எடுத்துச் செல்லவும்
- நீங்கள் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர் இந்த ஆவணங்கள் அனைத்தையும் நிழற்படம் எடுத்து உங்கள் வீட்டிலுள்ள ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்
- உங்களுக்க ஒரு அவசரமான இடர் ஏற்படும் பட்சத்தில் உங்களுக்கு உதவியளிக்கக்கூடிய நபர்களின் புலம்பெயர் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள். நீங்கள் செல்லும் நாட்டில் உங்கள் உறவினர்கள் இருந்தால் அவர்களது பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள், முகவரிகள் என்பவற்றை எடுத்துச் செல்வது மிகவும் பயன்தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பளம்.

- ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளத்தை உரிய முறையில் மாதந்தோறும் வீட்டு உரிமையாளரிடம் பெற்றுக்கொள்ளவும் சம்பளத்தை அவர்களிடமே சேமித்துக் கொள்ளுமாறு அவர்கள் முன்மொழிய வாய்ப்புள்ளது. இருப்பினும் நீங்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்க வேண்டியதில்லை
- உங்கள் சம்பளத்தில் தேவையான அளவினை மட்டும் உங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கின்றவர்களுக்கு அல்லது கணவனுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.
- நீங்கள் இலங்கையில் வைத்து உங்கள் பெயரில்திறந்துள்ள வங்கிக் கணக்குக்கு எஞ்சிய பகுதியை அனுப்பி வைப்பது மிகவும் உகந்தது. ஒரு வேளை நீங்கள் அனுப்பும் பணத்தை உங்கள் கணவர் அல்லது உறவினர்கள் செலவு செய்து விட்டால் நீங்கள் திரும்பி வரும்போது உங்கள் கையில் கிடைக்காமல் போகும் நிலை உருவாகும்.
- நீங்கள் இருக்கின்ற நாட்டில் இடைக்கிடை பொருட்களை கொள்வனவு செய்து அந்த வீட்டில் சேர்த்து வைப்பது அவ்வளவு பொருத்தமான செயலல்ல.
- பணத்தை மட்டும் சேகரித்து உங்கள்சேவைகாலம் முடிவுற்று மீண்டும் இலங்கைக்கு வருவதற்கு அண்மித்த காலப்பகுதியில் மட்டும் பொருட்களைக் கொள்வனவு செய்வது பொருத்தமானது.
- உங்கள் சேவை ஒப்பந்தத்தில் உங்கள் சேவைக்காலமானது 2 வருடங்கள் குறிப்பிடப்பட்டிருந்தால் விட்டு உரிமையாளர்கள் இன்னும் ஒரு வருடம் மேலதிகமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்தாலும் நீங்கள் கட்டாயம் இலங்கைக்கு வரவேண்டும் ஏனெனில் ஒப்பந்தத்தின்படி உங்கள் சேவைக்காலம் முடிவடைந்துள்ளது.
- அந்த நாட்டில் உங்கள் சுகாதாரம் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்த வேண்டும்
- கணவரையும் , பிள்ளைகளையும் அல்லது பெற்றோரையும் கைவிட்டு தமது விட்டிலிருந்தும் நாட்டிலிருந்தும் வெளியேறிக் காலத்தைக் கடத்தும்போது ஆரம்பக் காலப்பகுதியில் உங்களுக்கு மனதில் ஏக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு ஒரு புதிய அனுபவமாகும். இருப்பினும் அந்த நாட்டுக்கும், சூழலுக்கும்,மொழிக்கும் குறிப்பிட்ட வீட்டாருக்கும் பழக்கப்படும் வரை நீங்கள் பொறுமையுடன் செயற்படுவது கட்டாயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையிலுள்ள போது சிக்கல்கள் ஏற்படும் பட்சத்தில்

- சேவையின் போது பல்வேறுபட்ட சிக்கல்கள் எழலாம். அவையாவன, உணவு வழங்கப்படாமை, தங்குமிடவசதி வழங்கப்படாமை. சம்பளம் வழங்கப்படாமை, பல்வேறுபட்ட துன்புறுத்தல்களுக்கு உள்ளாக நேரிடுகின்றமை என்பனவாகும். இத்தகைய சிக்கல்கள் தோன்றினால் வீட்டு உரிமையாளருடன் சுமுகமாகப் பேசி அமைதியாக அவற்றைத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கவும். முடியாத பட்சத்தில் நீங்கள் உள்ள நாட்டில் உங்களைப் பொறுப்பேற்ற ஏஜன்சிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும். இன்றேல் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியத்திற்கோ இலங்கையிலுள்ள உங்கள் வீட்டுக்கு தெரிவிக்கவும்.
- உங்களுக்கு மீண்டும் இலங்கைக்கு திரும்பிவர தேவைப்படும் பட்சத்தில் ஏஜன்சியின் ஊடாக மீண்டும் திரும்பிவர முயற்சிப்பதே மிகவும் பொருத்தமானது. அவ்வாறின்றி நண்பர்களின் அல்லது தெரிந்த வேறு ஆட்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் வீட்டிலிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தால் வேறு வகையான சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியயேற்படும். அவசரமான சந்தர்பத்தில் அறிவிக்க வேண்டிய வெளிநாட்டு தூதரகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.

| நாடுகள் | தொலைபேசி இலக்கங்கள் |
|---|---|
| குவைத் | 00-965-2531-2482, 25339178, 25339196 |
| சவுதி அரேபியா | 00-966-5556-00527, 555167928, 555459622 |
| டுபாய் | 00-971-4398-4007, 43986991 |
| லெபனான் | 00-961-5956-041, 5924602 |
| ஓமான் (மஸ்கட்) | 00-968-2469-1011, 24600231 |
| சிங்கப்பூர் | 00-656-2546-773 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்.ஐ.வி / எயிட்ஸ் பற்றி தெரிந்து கொள்ளுங்கள் வாழ்வை வளமுள்ளதாக்குங்கள்.

எச்.ஐ. வி எயிட்ஸ் தொற்றல் மிகவும் பாராதூரம்மானது இப்பாராதூரம்மான நோய் ஏற்படாமல் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக எல்லா சந்தர்ப்பங்களிலும் மிக விழிப்பாக செயல்படுவது அவசியமாகும்.

## எச்.ஐ.வி என்றால்

- மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும் வைரஸ் ஆகும்.
- ஒருவருக்கு எச்.ஐ. வி. ஏற்பட்டதும், தொற்று நோய்களை எதிர்க்கும் திறன், உடலில் உள்ள சக்தி (நோய் எதிர்ப்பு சக்தி) படிப்படியாக குறையும்.
- எச்.ஐ. வி தொற்றிய ஒருவர் எயிட்ஸ் நிலைமையை அடைய 10 வருடங்கள் செல்லும்.

## எச்.ஐ.வி என்பது

- ஆகக் குறைந்த நோய் எதிர்ப்புச் சக்தி நிலைமையாகும்
- எச்.ஐ.வி தொற்றிய ஒருவர் எயிட்ஸ் நிலைமையை அடைய 10 வருடங்கள் செல்லும்.
- எச்.ஐ.வி. ஏற்பட்டவர்கள் நல்ல தேகாரோக்கியத்துடன் பல வருடங்கள் வாழலாம். தற்சமயம் நோயை முற்றாகக் குணப்படுத்த முடியா விட்டாலும், நோயாளியின் ஆயுட் காலத்தை வைத்தியச் சிகிச்சை மூலம் நீடிக்கச் செய்ய முடியும்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான பயிற்சிகளில் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளையும், வழிகாட்டலையும் பின்பற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது தகவல்கள்.

- வெளி நாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு நலனோம்பல் அமைச்சர் கௌரவ டிலான் பெரேரா
- இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியக தலைவர் கௌரவ அமல்சேனாலங்காதிகார
- இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சட்டம் 1985ம் ஆண்டில் 21ம் இலக்க சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது
- வேலை வழங்குனர் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவைப்படின் அந்நாட்டிலுள்ள முகவருக்கு ரூபா 5 லட்சம் வழங்க வேண்டும்
- அத்தொகையில் இலங்கை முகவருக்கு 350,000.00 கிடைக்கின்றது (சவூதி)
- இத்தொகை நாட்டுக்கு நாடு வித்தியாசப்படுகிறது
- பயிற்சியின் இறுதி நாளன்று குடும்பத்தாரின் ஒன்று கூடலில் கலந்து கொள்வது அவசியம்
- 2007ம் ஆண்டு முதல் குடும்ப தினம் அறிமுகப்படுத்தப் பட்டது
- 1973ம் ஆண்டு முதல் பிலிப்பபைன்ஸ் நாட்டிலிருந்து வேலையாட்களை பெற்றனர்
- 1977ம் ஆண்டுக்கு பின் இலங்கையிலிருந்து வேலையாட்கள் அனுப்பபட்டது
- ஒப்பந்த காலம் நிறைவுற்ற பின் வீட்டு உரிமையாளர் விமான பயணச் சீட்டு வழங்க வேண்டும்
- இலங்கையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் 1170 பேர்கள் உள்ளனர்.
- 2003ம் ஆண்டு முதல் சகல விபரங்களும் கணிணி மயப்படுத்தப்பட்டுள்ளது
- தொழில்களுக்கு ஏற்ப பதிவுக் கட்டணம் வித்தியாசப்படும்
- இலங்கையில் மக்கள் தொகை 2 கோடியாகும்
- இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைக்காக சென்றவர்களின் தொகை 20 லட்ச்மாகும்.
- குவைத் , கட்டார், கொரியா ஆகிய நாடுகளுக்கு செல்ல வேண்டுமாயின் பொலிஸ் அறிக்கை அவசியம் மேலும் சில நாடுகளுக்கு பொருந்தும்
- நீங்கள் பணியாற்றும் வீட்டிலிருந்து திரும்பும் பொழுது உங்களுக்கு விருப்பமான ஒருவரை பணியாளராக நியமிக்க கூடாது.
- ஒவ்வொரு நாட்டின் சட்ட திட்டங்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல்.
- மரணங்கள் ஏற்படும் பொழுது மரணத்தின் தன்மைக்கு ஏற்ப 150,000.00 முதல் 300,000.00 வரை நஸ்டஈடாக கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஹண பியச மத்திய நிலையத்தில் கிடைக்க கூடிய மேலதிக சேவைகள்

- வெளிநாட்டுக்குப் போகும் பொழுதும், வரும் பொழுதும் உடை மாற்றுவது, ஓய்வெடுத்தல், உணவு அருந்துதல் போன்றவற்றுக்கு பயன்படுத்தலாம்
- ஏதேனும் அவசர தேவைகளுக்கு முன் அறிவித்தலுடன் தங்கலாம்
- வீட்டிற்கு போக விருப்ப இல்லாவிடின் அதற்கான காரணம் சரியாயின் தங்கிக் கொள்ள முடியும்
- தவறான முறையில் குழந்தை பிரசவிக்கயிருந்தால் பிரசவம் வரையில் அல்லது பிரசவத்துக்கு பின்னும் தங்கியிருக்கலாம்.
- கொடூரமாக பாலியல் வன்முறைக்கு உட்பட்டவர்கள், அவர்களின் தேவைகேற்ப தங்குவதற்கு இடம் கிடைக்கும்.
- குழந்தைகளுடன் வீடு செல்ல மறுப்பவர்கள் தங்கியிருக்கலாம்.
- பிரச்சினைகள் இருப்பின் புகார் செய்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு
- ஏனைய நலன் புரி சேவைகள், உதவிகள் பெற்றுக்கொள்ளலாம்
- அல்மேனிய பெட்டிகளில் சாமான்களை கொண்டு வருவதை தவிர்த்துக் கொள்ளல்.
- தன் விருப்ப படி ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு பணிக்காக செல்லக் கூடாது.
- பணியாளருக்கு பாதகமான ஏதேனும் சட்ட பிரச்சனைகள் ஏற்படும் போது அது தொடர்பாக வழக்கு தொடர்ந்தால் அதற்கான செலவுகளை வெளிநாட்டு தூதுவர் ஆலயம் பொறுப்பேற்கும்
- பணியாளர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படும் போது அவர்கள் வெளிநாட்டு தூதுவர் ஆலயத்திலுள்ள பாதுகாப்பு வீடு (Self house) செல்லாம் இவர்களை பராமரிப்பதற்குரிய செலவுகளை வெளிநாட்டு தூதுவர் ஆலயம் பொறுப்பேற்கும்.
- திடீர் விபத்துக்கள், அவசரகால நிலைமைகள் ஏற்படும் போது இலங்கைக்கு அழைத்து வருவதற்கான சகல செலவுகளையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும், வெளிநாட்டு தூதுவர் ஆலயமும் பொறுப்பேற்கும்.
- பணி செய்யும் வீடுகளில் தாங்கி கொள்ள முடியாத பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்கள் வெளிநாட்டு தூதுவர் ஆலயத்துக்கு வரவேண்டும். வேறு எங்கும் செல்வது சட்டத்துக்கு முரணானது.
- ஒரு வருடத்திற்கு மரணங்கள் 250 முதல் 300 வரையிலாக இடம் பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெளிவில்லாத புலம் பெயர் தொழில். அபிவிருத்தி அடையாத குடும்பம்.

- தெளிவில்லாத மனப்பாங்கு
- இலகுவாக ஏமாற்றதிற்கு உள்ளாகுதல்.
- இடைத் தரகரின் தவறான வழிநடத்தலை பின்பற்றுதல்.
- பணம் விரயம், சொத்து இழப்பு, ஆவணங்கள் இழப்பு, பிரச்சனைக்கு ஆளாகுதல்
- தன்னுடைய தரம், ஆற்றல் தொடர்பாக அறிந்திருக்கவில்லை.
- திறனுக்கு ஏற்ற தொழிலைத் தெரிவு செய்யவில்லை.
- தொழில் செய்யும் இடத்தில் முரண்பாடுகள்
- ஆவணங்கள் தொடர்பான தெளிவின்மை.
- கடவுச்சீட்டு பெறுவதில் மற்றவர்களில் தங்கியிருப்பர்.
- அரச அங்கீகாரம் பெற்ற முகவரைப்பற்றி தெரிந்து இருக்கவில்லை.
- இடைத் தரகர்களிடம் தங்கியிருத்தல்
- குடும்ப பின் விளைவுகளை அறிந்து இருக்கவில்லை.
- குடும்பம், பிள்ளைகள் தொடர்பான முன் ஏற்பாடுகள் இல்லை.
- நோய் வாய்பட்ட பிள்ளைகள், இடை விலகிய மாணவர்கள், சிறு வயது திருமணம், பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் தொழிலாளர்கள், மது பாவனை அதிகரித்தல், தவறான நண்பர்களுடன் உறவு குற்ற செயல்கள் அதிகரித்தல்.
- அவசர முடிவுகள்
- பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல்
- மற்றவர்களிடம் ஆலோசனை பெறவில்லை.
- தவறான வழிநடத்தலை ஏற்றுக்கொள்ளல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் பற்றி தெரிந்திருக்கவில்லை.
- உரிமைகளை இழக்கின்றனர்.
- பதிவு செய்வதின் அவசியத்தை அறிந்திருக்கவில்லை.
- ஆவணங்களை பிரதி செய்வதின் அவசியத்தை அறிந்திருக்கவில்லை.
- நிதி முகாமைத்துவம் தொடர்பாக தெளிவின்மை.
- தெளிவற்ற மனப்பாங்குடன் தொழில் புரிதல்.
- சமயோசித அறிவை பயன்படுத்துவது இல்லை.
- தன்னுடைய குடும்பத்தாருடன் தொடர்பு இன்மை.
- குடும்பத்தில் உள்ளோர் உளப்பாதிப்புக்கு உட்படுகின்றனர்.
- பிள்ளைகளும், மற்றவர்களும் பொறுப்பு அற்றவர்களாக உள்ளனர்.
- பிள்ளைகளின் கல்வி, போஷாக்கு நோய் தடுப்பு சீர்குலைந்துள்ளனர்.
- சிறுவர் கழகங்களுக்கு வருவது இல்லை.
- குடும்ப கலாச்சாரம், குடும்ப கட்டமைப்பு சீர்குலைந்து இருக்கும்.
- சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைத்தல்.

**இடைத் தரகர்களின் தலையீடும், தவறான வழிநடத்தலும் அதிகரித்து காணப்படுகிறது.**



- பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பாக அரச சார்ப்பற்ற நிறுவனங்கள் செயல்படவில்லை.
- களமட்டத்தில் பயிற்சி பெற சந்தர்ப்பம் இல்லை.
- ஆலோசனைகள் பெறுவதற்குறிய வாய்ப்பு இல்லை.
- தோட்ட நிர்வாகம் சரியான வழிமுறைமைகளை பின்பற்றவிலலை.
- பிரதேச செயலாளர் மட்டத்தில் சரியாக ஆலோசனை சொல்வதற்கு பொறிமுறைகள் இல்லை.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்க்கும், மக்களுக்கும் நேரடி தொடர்பு இல்லை.
- கிராம சேவகர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் சரியாக பயிற்றப்படவில்லை.
- நுவரெலியா மாவட்டதில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இல்லை.
- அபரிவதமான கற்பனை (அளவுக்கடந்த ஆசை)
- ஆசை வார்த்தையை ஏற்று செயற்படுதல்.
- குறைந்த கல்வி, பொருளாதார சுமை.
- மற்றவர்களின் வற்புறுத்தல்.
- பொது அறிவு, பகுத்தறிய முடியாமை.
- குடும்ப அபிவிருத்தியில் உணர்வியின்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான புலம்பெயர் தொழில்

## அபிவிருத்தி அடைந்த குடும்பம்

- குடும்பத்தாரின் முழுமையான விருப்பத்தை பெற்று இருப்பர்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான பொருத்தமான தகவல்களை அறிந்து இருப்பார்.
- தனது திறனை தெளிவாக அறிந்து இருப்பர்
- சரியான ஆவணங்கள் உண்டு.
- இலகுவான முறையில் கடவுச்சீட்டு பெற்று இருப்பர்.
- அரச அங்கிகாரம் பெற்ற சரியான முகவரை தேர்ந்து எடுத்து இருப்பார்
- பயிற்சி பெற்று இருப்பார்.
- பிள்ளைகளின் பாதுகாப்பு,அன்பு, போஷாக்கு, கல்வி, தொடர்பான தற்காலிக முன் ஏற்பாடு செய்து இருப்பர்
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடன் தொடர்புகள் அதிகரித்து இருக்கும்.
- வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து இருப்பர்.
- வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் நன்மைகளை அனுபவிப்பர்.
- ஆவணங்கள் அனைத்தும் பிரதி செய்து கோவைப்படுத்தப்பட்டு இருக்கும்.
- NRFC வங்கிக் கணக்கை திறந்து இருப்பார்.
- குடும்ப செலவிற்கான பிரத்தியேக கணக்கு ஒன்றை திறந்து இருப்பர்
- திடமான, தெளிவான, மனப்பாங்குடன் தொழில் புரிவர்
- தொழில் செய்யும் குடும்பத்துடன் நல்லுறவு ஏற்பட்டிருக்கும்.
- தன்னுடைய குடும்பத்திற்க்கும், தனக்கும் தொடர்புகள் அதிகரித்து இருக்கும்.
- குடும்பத்தில் உள்ளோர் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருப்பர்.
- குடும்பத்தாருடன் அன்பு, பாசம் வளர்ந்து இருக்கும்.
- பிள்ளைகள் பொறுப்புடன் கல்வி கற்ப்பர்.
- போஷாக்கு உணவு, நோய் தடுப்பு முறைகளை பின்பற்றி இருப்பர்
- பொருத்தமான பாதுகாப்பு முறைகள் இருக்கின்றது.
- சிறுவர்கள் சிறுவர் கழகத்திற்க்கு வருகை தருகின்றனர்.
- குடும்பத்தினர் பிரிடோ பணிகளில் ஈடுப்படுகின்றனர்.
- நிதி முகாமைத்துவம் நன்றாக இருக்கின்றது.
- குடும்பத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும்.
- சமூகத்தில் நன்மதிப்பை பெற்று இருப்பர்.



### பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான அறிவை தெளிவாக அறிந்துள்ளனர்.

- பிரிடோ பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பாக செயற்படுகின்றது.
- களமட்டத்தில் பயிற்சி பெறும் வாய்ப்புகள் உளளன.
- தோட்ட மட்டத்தில் பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆலோசனைக் குழு உள்ளன.
- இலகுவான முறையில் தகவல்களை பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளது.
- தோட்ட நிர்வாகம் சரியான வழிமுறைகளை பின்பற்றுகிறது.
- சட்டம், உரிமை தொடர்பான ஆலோசனைகளைப் பெற வாய்ப்பு உள்ளது.
- பயிற்றப்பட்ட பிரிடோ முன்பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர்.
- பெண்கள், இளைஞர், சிறுவர் கழகங்கள் இவைதொடர்பாக வேலை செய்கிறது.
- கிராம சேவகர்கள் பயிற்றப்பட்டுள்ளனர்.
- பிரதேச செயலாளர் பணிமனையில் பாதுகாப்பான வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக செயல்படுகின்றனர்.
- அபிவிருத்தி உத்தியோத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் களமட்டதில் பணியாற்றுகின்றது.
- சாதகமான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு, நலனோம்பு அமைச்சு உள்ளது.
- வெளி விவகார அமைச்சு உள்ளது.
- அமைச்சர்கள் உள்ளார்கள்.
- பாதுகாப்பான வங்கிக் கணக்கு திறப்பதற்குறிய வாய்ப்பு உள்ளது. **(NRFC)**
- சிறுவர், பெண்கள் பாதுகாப்பு பொலிஸ் பிரிவு உள்ளது.
- சர்வதேச பெண்கள் பட்டயம் உள்ளது.
- சர்வதேச சிறுவர் சமவாய பட்டயம் உள்ளது.
- சர்வதேச தொழிலாளர் பட்டயம் உள்ளது. **( ILO , SDC )**
- புலம் பெயர் தொழிலாளர் முன்னணி செயற்படுகிறது**(MWF)**
- தேசிய தொழில் சங்க சம்மேளனம் செயற்படுகிறது **(I.T.U.C.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டில் தொழில்புரியச் செல்ல நீங்கள் விருப்பினால் உங்களுடன் பிரிடோ நிறுவனம் கைகோர்த்திருக்கும்.

பெருந்தோட்ட பகுதியிலிருந்து வெளிநாடுகளுக்கு தொழில்புரிய செல்லும் வீட்டுப்பணிப் பெண்களோ அல்லது வேறு தொழிலுக்காக செல்பவர்களாக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் அனைத்து தரப்பினரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் அப்பாதிப்பிலிருந்து அவர்களை இலகுவில் மீட்டெடுக்க முடியாத சந்தர்ப்பமே அதிகமாக காணப்படுகிறது. இந் நிலை அதிகரித்துக் கொண்டு வருவதுடன் இதனால் ஏற்படும் சமூக பின்னடைவுகள் பாராதூரமான விளைவுகளை கொண்டு வருகிறது. இவற்றிலிருந்து மக்களை பாதுகாத்து சரியான முறையிலும் பாதுகாப்பான வழி முறைகளையும் சட்ட விதி முறைகளையும் பின்பற்றி வெளிநாட்டு வேலைகளுக்கு செல்வதாகும்.

பிள்ளைகளின் கல்வி, குடும்பமேன்பாடு போன்ற குறிக்கோள்களை நோக்காக கொண்டு சென்றாலும் சரியான வழிமுறையை பின்பற்றாததனால் அநேகமான சந்தர்ப்பங்களில் நிறைவேறுவதில்லை. மாறாக குடும்பம், சின்னாபின்னம்மாக சிதைவு பெறுவதுடன். தேவையற்ற ஆடம்பர செயல்பாடுகளே அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் சிறுவர்களின் கல்வி, குடும்பம் அபிவிருத்தி அடையாத நிலையே காணப்படுகிறது. ஆகவே பாதுகாப்பான முறையில் தெளிவான நோக்கத்துடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்று கல்வி குடும்ப அபிவிருத்தியை அடைவதை இலக்காக கொண்டு செயற்படும் திட்டத்தில் உங்களுடன் பிரிடோ நிறுவனம் கைகோர்த்து செயற்பட ஆரம்பித்துள்ளது. எனவே நீங்கள் சரியான ஆலோசனைகளை பெற்று நம்பிக்கையுடன் எதிர்கால அபிவிருத்தியைக் காணலாம் குறிப்பாக கீழ்காணும் 04 அம்சங்களில் உங்களை வழிநடத்த காத்திருக்கின்றோம்.

01. போகும் முன் எவ்வாறு திட்டமிட்டுக் கொள்வது என்பதை சரியாக தெரிந்து கொள்ளல்.
02. போகும் போது எவ்வாற்றன விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்
03. வெளிநாட்டில் வேலை செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைமைகள்
04. மீண்டும் திரும்பி வந்த பின் சமூகத்துடன் இசைவாக செயல்படுவதற்குரிய வழிமுறைகள்.

ஆகிய நான்கு அம்சங்களை தெளிவாக அறிந்து கொண்டு புரிந்து கொண்டு நோக்கத்தை அடைவீர்கள். என்ற நம்பிக்கை பிரிடோ நிறுவனத்துக்கு உண்டு. அந்த நம்பிக்கையுடன் இணைந்து செயல்படுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org